## வேளாண்மை

இறப்பரிலும், தெங்கிலும் புத்தெழுச்சியும், தேயிலையில் வீழ்ச்சியும்; நெல்லில் தொடர்ச்சியான வளர்ச்சியும் ஏனைய பயிர்களில் பொதுவான தேக்க நிலையுமே, 1978 ஆம் ஆண்டு வேளாண்மையில் குறிப்பிடத்தக்க பண்புகளாக விளங்கின. மீன் உற்பத்தி உயர்ந்தபோதும், கால்நடைக்கைத்தொழிலின் மந்தநிலை காரணமாக உருவான விலங்கு புரதச்சத்துத் தேவைகளின் பற்ருக்குறையை இது நிறைவு செய்யப்போதுமானதாக இருக்கவில்லை. நவெம்பர் சூருவளியின் காரணமாகக்கிழக்குப் பகுதியின் தெங்கு, நெல், கசுக்கொட்டை, காடுகள் என்பன பெருமளவில் சேதமடைந்தன. பொதுவாக 1978 ஆம் ஆண்டு வேளாண்மைத்துறையில் ஒரு சீரற்ற ஆண்டாகவே இருந்தது.

ஆண்டுத்தொடக்கத்தில் வேளாண்மைக்காணி, பெருந்தோட்டக் கைத்தொழில் கடற்ருெழில் ஆகிய மூன்று அமைச்சுக்கள் இத்துறையின் அபிவிருத்திக்குப் பொறுப்பாக இருந்தன. ஆண்டுமுடிவில் ஆறு அமைச்சுக்கள் இத்துறையின் அபிவிருத்திக்குப் பொறுப்பாக இருந்தன. வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு நெல், துணை உணவுப்பயிர்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்களுடன் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கும், விரிவாக்கங்களுக்கும் பொறுப்பாக இருந்தது. முன்னைய வேளாண்மை அமைச்சின் தொழிற்பாடுகளான காணி அபிவிருத்தியும் வழங்கலும் புதிய அமைச்சான காணி, காணி அபிவிருத்தி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது. கால்நடை அபிவிருத்தி இன்னெரு புதிய அமைச்சான கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சிடம் கையளிக்கப்பட்டது. நாட்டின் ஏறத்தாள 40 சதவீதத்தை உள்ளடக்கும் மகாவலி ஆற்றுவடிநில அபிவிருத்தி முக்கியமான ஒன்ருகக்கருதப்பட்டு புதிய அமைச்சான மகாவலி அபிவிருத்தி அமைச்சிடம் கையளிக்கப்பட்டது. பெருந்தோட்டத்துறையில் முக்கிய அமைச்சான பொருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுடன் - இணைந்ததாக புதிய அமைச்சான தெங்கு கைத்தொழில்கள் அமைச்சு உருவாக்கப்பட்டது.

தனிப்பட்ட சொந்தமான காணிகளின்வேளாண்மை அபிவிருத்தி நடவடிக்கைகளை இணைப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக வேளாண்மை அபிவிருத்தி அதிகார சபை (வே. அ. ச.) ஒன்று உருவாக்கப்பட்டது. இது அரசியல் தலைவர்களையும் தனது வேலையில் ஈடுபடுத்தும் வகையில் தனது நடவடிக்கைகளைத் தொகுதி அடிப்படையில் அமைத்தது புதிய தேசிய வெளாண்மை பன்முகப்படுத்தலும் குடியமர்த்தல் அதிகாரசபை (தே. வே. ப. கு. அ.) பயிர் பன்முகப்படுத்தல் நடவடிக்கைகளை பொறுப்பேற்பதற்கு (பெரும்பாலும் மத்திய உயர்நிலங்களில் பொருளாதார சிக்கனமற்ற தேயிலை நிலங்களை) புதிய தேசிய வேளாண்மை பன்முகப்படுத்தல் குடியமர்த்தல் அதிகாரசபை அமைக்கப்பட்டது. இதுகாலவரை வேளாண்மைப் பன்முகப்படுத்தல் செயற்றிட்டம் உ. வே. அ/ஐ நா. அ தி. ஆல் பொறுப்பேற்கப்பட்டு நிதியிடப்பட்டது.

முன்னைய நிலச்சொந்தக்காரர்களால் காணிச்சீர்திருத்தத்தின் கீழ் கொடுக்கப்பட்ட அவர்களின் காணிகள் தொடர்பாக குறைகேள் விண்ணப்பங்கள் தொடர்ந்தும் காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவினுல் மீளாய்வு செய்யப்பட்டன. அதே வேளை இரண்டு பெரிய அரசு உடமையாக்கப்பட்ட காணிமுகாமை நிறுவனங்களான மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை (மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை அல்லது ம. தோ. அ ச.) இலங்கை அரச பெருந்தோட்டக்

கூட்டுத்தாபனங்கள் (அ. பெ. கூ) ஆகியவற்றிற்கிடையில் காணிகளை "சீராகப்பங்கீடு செய்வதை" பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு மேற்கொண்டது. தொழிற்பாட்டுச் செலவைக்குறைப்பதும், செயற்றிறனை அதிகரிப்பதுமே இச்சீராக்கத்தின் நோக்கமாகும். எங்கு நிலத்திற்கான இறுதிச்சொந்தம், நிச்சயமற்ற தன்மைக்கு உற்பட்டிருந்ததோ அங்கு கட்டாயமான அபிவிருத்தி வேலைகள் பின்தள்ளப்பட்டமைக்கு சான்று இருக்கின்றது. பெரும்பாலும் இந்த மாற்றங்களுக்குத் தேவைகள் இருந்தன. எனினும் இது சில குறிப்பிட்ட குழப்ப நிலைகளுக்கும் காரணமாக இருந்தது. இரண்டுநிறுவனங்களினதும் மாநில அமைப்புக்கள் பற்றி முடிவெடுக்கப் பட்டனவெனினும், பெருந்தோட்டத்துறையில் உயர்ந்த முகாமைத்துவமட்டத்திற்கு வழங்கும் ஊதியங்கள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் எவ்விதமாற்றமுமின்றி தீர்க்கப் படாமலேயே இருந்தன,

தேயிலையின் விலைகளில் ஏற்பட்ட பெருமளவு வீழ்ச்சிப்போக்கு தேயிலைக் கைத்தொழிலில் இருந்தும் பெறப்பட்ட இலாப எல்லையளவை மிகக் குறைத்ததுடன் இவற்றுள் உயர்நில, மத்திய நில வளர் [தேயிலைகள் மிகப் பாதிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. தேயிலை, இறப்பர், தெங்கு மீள் நடுகைக்கான உதவு தொகைகள் உயர்வாக இருந்த போதும் மீள்நடுகையின் சாதனை தொடர்ந்தும் விரும்பிய மட்டத்திற்கும் மிகக் கீழேயே இருந்திருக்கிறது. தேயிலையிலிருந்து பெறப்பட்ட சுருங்கிய இலாபம், தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியவற்றிலுள்ள பயிரிடும் பொருட்களின் பற்றுக்குறை, கவர்ச்சியற்ற மீள்நடுகை உதவுதொகைகள் (இதில் பெரும்பாலான விடயங்கள் பால் கொள்ளும் காலத்தில் உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் வருமான இழப்பிற்கு ஈடுகொடுக்கவில்லை) தொடர்ந்தும் இருந்து வந்தமை ஆகியன மீள்நடுகை முயற்சியைத் தடுப்பனவாகத் தோன்றுகின்றன. சிறு ஏற்றுமதிப் பயிர்களில் மீள்நடுகை, புதிதாகப் பயிரிடல்களை ஊக்குவிப்பதற்காக கூடியளவு அனைத்தையும் உள்ளடக்கிய உதவுதொகைத்திட்டமும் புகுத்தப்பட்டது. இவ்வாண்டின்போது வளமாக்கிக்கான உதவுதொகைகள் பலமுறை திருத்தப் பட்டதுடன் இறுதியாக 1978 நவெம்பரில் இறக்குமதி விலையில் 50 சதவீதம் கொண்ட ஒரேசீரான உதவு தொகை கொண்டுவரப்பட்டது. அரசின் தாராள இறக்குமதிக் கொள்கையைத் தொடர்ந்து வளமாக்கி இறக்குமதியில் அரச வளமாக்கிக் கூட்டுத்தாபனம் கொண்டிருந்த தனிஉரிமை ஒழிக்கப் பட்டது

தேயிலை, இறப்பர் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு பெரும் திட்டத்தை உருவாக்குவதற்கு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு குறிப்பிட்ட வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டது. இவ்விரண்டு பயிர்களையும் பொறுத்தவரையில் நீண்டகாலமாக அபிவிருத்தியையும் குறிப்பிடத்தக்க நுட்பத்தரத்தையும் கொண்டிருப்பது மட்டுமன்றி கடந்தகாலத்தில் இத்தொழிலில் முதிர்ச்சியுறுத நிலையில் இருந்த நாடுகளுக்குத் தேவையான உதவிகளையும் கூட வழங்கிய இலங்கைக்கு இத்தகைய வெளிநாட்டு உதவிகள் உண்மையில் தேவைதானு என்பது கருத்துப் போராட்டத்துக்குரியதாக இருக்கிறது. ஆண்டின் இறுதியில் இப்பெருந்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்டன. திக்கோயா, மஸ்கெலியாப் பகுதிகளிலுள்ள தேயிலைத் தோட்டங்களின் மறு நடுகைக்கான ஐந்தாண்டு செயற்றிட்டமொன்று 1978 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அறிவிக்கப்பட்டது. உலக வங்கியினுல் நிதியிடப்படும் இச்செயற்றிட்டத்தின் நோக்கம் தேயிலையின் உற்பத்தி செலவைக்குறைப்பதும் தேயிலையின் தரத்தை முன்னேற்றுவதுமேயாகும். 1978 இன்

இறுதியில் இலங்கைத் தேயிலைச்சபையால் சிறுநில உடமையாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பச்சைத் தேயிலைகளுக்கு ஆகக்குறைந்த உத்தரவாத விலையைக் கொடுப்பதற்கான திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

புதிய அமைச்சான கால்நடை அபிவிருத்தி அமைச்சு 1978 இறுதியில் விலங்குத்தீனியின் விலைகளைக் குறைத்தது. விலங்குத்தீனியின் உயர்ந்த விலைகளும், மாட்டிறைச்சி, பால் போன்ற குறிப்பிட்ட சிலவற்றின் கட்டுப்படுத்தப்பட்ட விலைகளும் கால்நடைக் கைத்தொழிலின் அபிவிருத்திக்குத் தடையாக இருந்தமை தெட்டத்தெளிவானது. அதே வேளையில் அண்மை ஆண்டுகள் வரை கவர்ச்சிகரமற்றதாக இருந்துவந்த உற்பத்தியாளர்களின் இலாப எல்லையை உயர்த்தும் முறையில் பால்சபை கொள்வனவு செய்யும் பாலின் விலையும் உயர்த்தப்பட்டது.

1977/78 பெரும்போகக் காலத்தில் தாராளமாக வழங்கப்பட்ட வேளாண்மைக் கொடுகடனில் பெருமளவு தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மீளப்பெறப்பட்டவைகள் மிகக் குறைவாக இருந்தன. ஐந்து மடங்காக அதிகரித்த கொடுகடனின் பணவீக்கத்தாக்கம் மிகப் பெருமளவாய் இருந்திருக்கும், இந்தக் காரணங்களால் 1978 சிறுபோக காலத்தில் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் குறிப்பிடத்தக்களவில் இறுக்கமாக்கப்பட்டது. முன்னைய பெரும்போகத்தில் வழங்கப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்திய நேர்மையான வேளாண்மையாளர்களே எதிர்காலத்தில் கடன்பெற உருத்துடையவர்களாக இருந்தனர். வர்த்தக வங்கிகளின் மேற்பார்வை, கடன் மீளளிப்புத் திட்டங்களை ஒருங்கு திரட்டும் முயற்சியை இது தூண்டும் என்ற துணிவில் அரசின் சார்பில் மத்திய வங்கியினல் 75 சதவீதம் வரையில் வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதம் மீளப் பெறப்பட்டது.


நெற்சந்தைப்படுத்தற் சபை 1978இன் பதிவுசெய்யப்பட்ட பெரும்போக, சிறுபோக நெல் உற்பத்தியில் 35 சதவீதத்தைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது. ஆனல் சபையின் களஞ்சியப்படுத்தல் இயலளவு கொள்வனவுகளுக்கும் கணிசமானளவு இருப்புக்களுக்கும் ஈடுகொடுக்கக்கூடிய முறையில் அதிகரிக்காததினல் திறந்த வெளிகளில் நீர்புகாத சீலைகளின் பாதுகாப்பின்கீழ் களஞ்சியப்படுத்தப்படவேண்டியிருந்தது. தொடக்கத்தில் சபை, ஆலையிடுவதில் உள்ள இடர்பாடுகளால் உணவு ஆணையாளரின் முழுத்தேவைகளுக்கும் ஈடுகொடுக்க முடியாத நிலையில் இருந்தது. பின்பு உணவு ஆணையாளர் உயர்ந்தளவு இருப்புக்கள் காரணமாக சபையிடமிருந்து கொள்வனவு செய்வதைக் குறைக்கவேண்டியிருந்தது. இது சபையின் களஞ்சியப்படுத்தல் பிரச்சனையைச் சிக்கலாக்கியது. மேயிலிருந்து பங்கீட்டிற்கு நெல்லையும் வழங்குவது என்று முடிவெடுக்கப்பட்டது. நெல்லாகவே வழங்கல் பெரும் ஆதரவை அடைந்தவுடன் சபையின் நெற்களஞ்சியப்படுத்தல் ஆலையிடல் சிக்கல்களையும் ஓரளவிற்கு இலகுவாக்கியது. சபைக்கும் உணவு ஆணையாளருக்குமிடையிலான இணைப்பு விரும்பிய அளவிற்கு முன்னேற்றமடையவில்லை. அரிசி உதவு தொகை மீளப் பெறப்பட்டமையும் மக்கள் தொகையின் ஏறத்தாள அரைப் பங்கிற்கே பங்கீட்டு வழங்கல் கொடுக்கப்பட்டமையும் நெல் அரிசியில் தனியார் வர்த்தகம் ஒரு வலிமையான வளர்ச்சிக்கு வழியமைத்துக் கொடுத்தது. இவ்வாண்டில் இறக்குமதி தாராளமாக்கப்பட்டதன் காரணமாக பழைய அரிசி ஆலையிடல் கைத்தொழில் திருந்தியமை, அரிசிக்கான தனியார் சந்தையின் உடனடியான விரிவுக்கு ஈடுகொடுக்க இயலச் செய்தது.

1977 ஆம் ஆண்டில் உறுதியளிக்கப்பட்ட வேளாண்மை அமைப்பின் சீர் திருத்தங்கள் 1978 இல் நிறைவேற்றப்படவில்லை. வேளாண்மைப்பணி நிலையங்கள் தொடர்ந்தும் அலுவலக முகாமையின் கீழ் இருந்தன. நெல் வேளாண்மையில் பழைய வரலாற்றுக் கொண்டாட்டங்களுக்கு புத்துயிர் அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முன்னைய வேளாண்மைப்பணிகள் திணைக்களம், சிறிய நீர்ப்பாசன நீர்த்தேங்கங்களின் பேணுதல்கள் உட்பட எல்லா வேளாண்மை அமைப்பையும் மேற்பார்வை செய்யக்கூடிய விதத்தில் மாற்றியமைக்கப்பட இருக்கின்றது.

அரசின் வேளாண்மை விலைக் கொள்கையில் பல பெரும் மாற்றங்கள் 1978 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்டன. உணவு விடயங்களைப் பொறுத்த வரையில் உணவு ஆணையாளர், கூட்டுறவு சங்கங்கள் ஊடாக இருத்தல் ரூ. 1.45 சதத்திற்கு கட்டுப்பாடற்ற சந்தையில் அரிசி கிடைக்க நடவடிக்கையை மேற்கொண்டார். நெல்லைக் குற்றி வழங்குவதற்காக வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு புசலுக்கான ரூ. 40 உடன் இந்தவிலை ஓரளவு ஈடுகொடுக்கத்தக்கதாக இருந்தது. நுகர்வோர் இந்த அரிசிக்கு அளித்த முதன்மை குறைவாகவே இருந்தபோதும் இத்தகைய அரிசி கிடைக்கத்தக்கதாக இருந்தமை கட்டுப்பாடற்ற சந்தையில் அரிசியின் விலை உறுதியாக இருப்பதற்கு உதவியது. கோதுமை மாவின் விலை மூன்று நிலைகளில் 60 சதத்திலிருந்து ரூ. 1.12 சதத்திற்கு உயர்த்தப்பட்டது. இந்த விலை இன்னும் உலக விலைகளுக்கு மிகக் கீழேயே இருக்கின்றது. இந்த உதவு தொகை விலையில் கோதுமை மா தாராளமாகக் கிடைக்கத்தக்கதாக இருந்தமை உண்மையில் துணை உணவுப்பயிர்களின் வளர்ச்சியை மட்டுப்படுத்தியது. சீனியின் விலை மாற்றமின்றி ஒரு இருத்தல் ரூ. 3 ஆக இருந்தது. இது உலக விலைகளுக்கு மேலாக இருந்தபோதும் இது, கரும்பு, கருப்பட்டி கைத்தொழிலில் ஒரு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக தோன்றுகிறது. உற்பத்தியில் கிடைக்கத்தக்க பருவகால விளைவையும் விலைகளின் உறுதிப்பாட்டையும் கவனத்திற்கு கொண்டு அரசாங்கம் சில குறிப்பிட்ட வேளாண்மை உற்பத்திகளுக்கு தாங்கி இருப்புக்களையும் கட்டியது. உள்ளூர் உற்பத்தியிலிருந்தும் கட்டப்பட்ட இத்தகைய தாங்கிருப்புக்கள் பருவகால விலைத்தளம்பல்களை ஒருநிலைப்படுத்தி உற்பத்தியாளர்கள் நுகர்வோர்கள் இலாபத்தை அடைவதற்கு உதவும். ஆனல் உள்நாட்டு வழங்கல்களுக்கு நிரம்பல் செய்வதற்காக எங்காவது இறக்குமதிகள் மேற்கொள்ளப்படுவது விலைகளைக் குறைந்தமட்டத்தில் உறுதியாக வைத்திருந்து உள்நாட்டு உற்பத்தியின்மீது பாகமான தாக்கத்தை ஏற்படுத்தும். விலைகளை உறுதியாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிகளில் வெங்காயம்" மிளகாய், உருளைக்கிழங்கு, மீன், கோழி இறைச்சி போன்றவையும் அடங்கும். பயறு, பருப்பு போன்ற சில இறக்குமதிகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்த இறக்குமதிக் கொள்கையே வெங்காயம், உருளைக்கிழங்கு, பயறு, தட்டைப்பயறு போன்ற உள்ளூர் உற்பத்தியின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது, என்பது மிகத் தெளிவானது. எனினும் இந்த இறக்குமதிகளைச் சந்தைக்கு வழங்கும்போது, உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு குறிப்பிடத்தக்க இலாபத்தைப் பெற அரசு அனுமதி அளித்தமை கவனிக்கத்தக்கது. எனவே, கணிசமான இலாப எல்லைகளைப் பெற்றுப் பழக்கப்பட்டுவிட்ட உற்பத்தியாளர்கள் மட்டுமே இந்தக்கொள்கையால் பெரும்பாலும் முயற்சி குன்றினர், கடந்த ஆண்டில் நிலவிய நெல்லிற்கான மிகச் சாதகமான நிலைமைகளின் கவர்ச்சியால் கவரப்பட்டு சில உற்பத்தியாளர்கள் மீண்டும் நெற் செய்கைக்குப் பெயர்வது சாத்தியமாயிற்று. தெங்குக் கைத்தொழிலில் 1978ம் ஆண்டின் சிக்கலான ஏற்றுமதி விரிவிதிப்பும் இலாப அளவு ஒழுங்குவிதிகளும் புகுத்தப்படுத்தப்பட்டன. இந்த ஒழுங்குவிதியின் நோக்கம் நுகர்வோருக்கு நியாயமான மட்டத்தில் விலைகளை வைத்திருப்பதும் உற்பத்தியாளர்களுக்கு ஒரு காய்க்கு 65 சதம் கிடைப்பதை உறுதிப்படுத்துவதுமே. பின்பு இது ஒரு காய்க்கு 85 சதமாக உயர்த்தப்பட்டது.

## பெரும் ஏற்றுமதிப் பயிர்களின் ஏற்றுமதி


### ஆண்டுதோறும்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம். மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் நெற் கொள்வனவுகள்

ஆண்டுதோறும்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், மூலம்; இலங்கை மத்திய வங்கி

## முதன்மை வேளாண்மைப் பயிர்களின் முக்கிய

| வகை | | 1969 | 1970 | 1971 |
|---|---|---|---|---|
| 1. தேயிலை | ... | | | |
| 1.1. உற்பத்தி (பத்து இலட்சம் இருத்தல்கள்) | ... | 484 | 468 | 480 |
| 1.2. மொத்த பரப்பு (ஏக்கர்களில்) | ... | 556,514 | 597,499 | 597,171 |
| 1.3. ஏக்கருக்குரிய விளைவு (இருத்தல்கள்) | ... | 811 | 811 | 833 |
| 1.4. உற்பத்திச் செலவு (ரூ. / இரு.) | ... | 1.51 | 1.52 | 1.54 |
| 1 5. சராசரி விலை (ரூ. / இரு.) | | | | |
| —கொழும்பு தேறிய | ... | 1.53 | 1.63 | 1.81 |
| —ஏற்றுமதி க. ஏ. பெ. | ... | 2.39 | 2.44 | 2.50 |
| 1.6. ஆண்டுதோறும் மீளப்பயிரிடப்பட்டவை (ஏக்கர்கள்) | ... | 6,500 | 6,857 | 6,640 |
| 1.7. ஒன்றுசேர்ந்து மீளப்பயிரிடப்பட்டவை (ஏக்கர்கள்) | ... | 33,428 | 40,285 | 46,925 |
| 2. இறப்பர் | | | | |
| 2.1. உற்பத்தி (ப. இ. இருத்தல்கள்) | ... | 333 | 351 | 312 |
| 2.2. மொத்தப் பரப்பு (ஏக்கர்கள்) | ... | 563,633 | 568,900 | 567,994 |
| 2.3. பால் சேகரிப்புக்குட்பட்ட பரப்பு (ஏக்கர்கள்) | ... | 493,712 | 496 210 | 494,355 |
| 2.4. ஏக்கருக்குரிய விளைவு (இருத்தல்கள்) | ... | 674 | 707 | 657 |
| 2.5. உற்பத்திச் செலவு (ரூ. / இரு.) | ... | 0.71 | 0.69 | 0.76 |
| 2.6. சராசரி விலை (ரூ. / இரு.) | | | | |
| --கொழும்பு ஆர். எஸ். எஸ். 1 | ... | 1.04 | 0.91 | 0.79 |
| —ஏற்றுமதி க. ஏ. பெ. | ... | 1.37 | 1.24 | 1.08 |
| 2.7. ஆண்டுதோறும் மீளப்பயிரிடப்பட்டவை (ஏக்கர்கள்) | ... | 12,084 | 10,239 | 8,477 |
| 2.8. ஒன்றுசேர்ந்து மீளப்பயிரிடப்பட்டவை (ஏக்கர்கள்) | ... | 276,132 | 286,371 | 294,848 |
| 3. தெங்கு | | | | |
| 3.1. உற்பத்தி (ப. இ. காய்கள்) | ... | 2,440 | 2,510 | 2,610 |
| 3.2. உற்பத்திச் செலவு (ரூ. / காய்) | ... | 0.07 | 0.08 | 0.08 |
| 3.3. சராசரி விலை (ரூ / காய்) | ... | வி.கி. | வி.கி. | வி.கி. |
| —கொழும்பு | ... | | | |
| —ஏற்றுமதி க. ஏ. பெ. | ... | 0.25 | 0.27 | 0.27 |
| 4. நெல் | | | | |
| 4.1. உற்பத்தி (ப. இ, புசல்கள்) | ... | 65.8 | 77.5 | 66.9 |
| 4.2. பரப்பு விதைக்கப்பட்டது ('000) | ... | 1,709 | 1,876 | 1,794 |
| --அறுவடை செய்யப்பட்டது ('000) | ... | 1,539 | 1,776 | 1,714 |
| --திருந்திய இனங்களின் கீழ் ('000) | ... | 1,108 | 1,325 | 1.204 |
| 4.3. ஏக்கருக்குரிய விளைவு (புசல்கள்) | ... | 50.33 | 51.30 | 45.91 |
| 4.4. உத்தரவாத விலை (ரூ. / புசல்) | ... | 14.00 | 14.00 | 14.00 |
| 4.5. உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் சொள்வனவுகள் | ... | 13.7 | 26.2 | 32.4 |

* ஏற்றுமதிகளின் கணக்குச் சமமான சராசரி விலை

† மட்டக்களப்பு, இரத்தினபுரி, யாழ்ப்பாண மாவட்டங்களின் 1978 சிறுபோக எண்தொகைகள் நீங்கலாக

## குறிகாட்டிகள் 1969 - 1978

| 1972 | 1973 | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 (தற்காலிக மானவை) |
|---|---|---|---|---|---|---|
| 471 | 466 | 450 | 471 | 433 | 460 | 439 |
| 597,645 | 598,740 | 598,466 | 597,691 | 594,481 | 598,024 | 603,464 |
| 816 | 805 | 882 | 920 | 839 | 899 | 838 |
| 1.60 | 2.03 | 2.52 | 3.04 | 3.37 | 3.54 | 4.76 |
| | | | | | | |
| 1.90 | 1.92 | 2.67 | 2.79 | 3.54 | 6.10 | 5.28 |
| 2.77 | 2.78 | 3.52 | 4.12 | 4.76 | 8.55 | 15.07 |
| 6,418 | 5,953 | 4,282 | 4,356 | 2,756 | 3,067 | 5,811 |
| 53,343 | 59,296 | 63,578 | 67,934 | 70,690 | 73,757 | 79,568 |
| | | | | | | |
| 309 | 341 | 291 | 328 | 335 | 322 | 343 |
| 567,060 | 565,000 | 563,406 | 562,494 | 560,872 | 559,850 | 559,257 |
| 491,324 | 475,529 | 475,165 | 477,110 | 474,626 | 466,401 | 456,434 |
| 658 | 694 | 634 | 691 | 705 | 690 | 753 |
| 0.75 | 0.85 | 1.12 | 1.25 | 1.49 | 1.70 | 2.20 |
| | | | | | | |
| 0.81 | 1.17 | 1.28 | 1.13 | 1.97 | 2.05 | 3.14 |
| 0.93 | 1.67 | 2.61 | 1.84 | 2.95 | 3.11 | 6.76 |
| 8,742 | 7,276 | 7,076 | 7,980 | 6,299 | 6,464 | 7,968 |
| 303,590 | 310.866 | 317,942 | 325,922 | 332,221 | 338,685 | 346,653 |
| | | | | | | |
| 2,963 | 1,935 | 2,031 | 2,398 | 2.330 | 1,821 | 2,207 |
| 0.08 | 0.10 | 0.10 | 0.11 | 0.16 | 0.21 | 0.25 |
| | | | | | | |
| 0.14 | 0.25 | 0.56 | 0.32 | 0.45 | 0.92 | 0.85 |
| 0.21 | 0.34 | 0.86 | 0.46 | 0.47 | 1.19 | 1.85 |
| | | | | | | |
| 62.9 | 62.9 | 76.8 | 55.3 | 60.0 | 80.4 | 90.6 |
| 1,795 | 1,792 | 2,038 | 1,719 | 1,789 | 2,046 | 2,162 |
| 1,579 | 1,660 | 1,969 | 1.476 | 1,570 | 1,933 | 2.074 |
| 1,252 | 1,284 | 1,647 | 1. 285 | 1,381 | 1,710 | 1,692† |
| 46.87 | 44.58 | 45.65 | 44.04 | 44.91 | 48.92 | 50.70 |
| 14.00 | 18.00 | 33.00 | 33.00 | 33.00 | 33.00 | 40.00 |
| | | | | | | |
| 26.4 | 22.9 | 20.9 | 11.3 | 12.8 | 24.6 | 32.0 |

மூலங்கள்: இலங்கை தேயிலைச் சபை
இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
தெங்கு சந்தைபபடுத்தற் சபை
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை
தெங்கு பயிர்ச் செய்கைச் சபை
குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம்
வேளாண்மைஅபிவிருத்திஆராய்ச்சி அமைச்சு
நெற் சந்தைப்படுத்தற் சபை

அடிப்படையில் வேளாண்மைத்துறையில் பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகள் அரசின் முரண்பட்ட கொள்கைகளைப் பிரதிபலித்தது. பெருந்தோட்டத்துறையில் இருந்த முரண்பாடு, அரசின் வருமானத் தேவைகளுக்கும் வேளாண்மையாளர்களின் பொருளாதார வளத்தை உறுதிப்படுத்துவதற்குமிடையில் இருந்தது. உள்ளூர்த்துறையைப் பொறுத்தவரை நுகர்வோருக்கு நியாயமான விலைகளை உறுதிப்படுத்தும் தேவைக்கும், வேளாண்மையாளர்க்கு இலாபமான விலைகளை அளிப்பதற்குமிடையில் இருந்தது. இத்தகைய முரண்பாடுகள் எளிதில் தீர்க்க முடியாதவை. எனினும் இத் துறை மீண்டும் புத்தெழுச்சிபெறவேண்டின் உடனடியான தீர்வுகள் தேவையானவைகளாகும்.

கடந்த பத்தாண்டு காலத்தின் தேயிலை, இறப்பர், நெல் ஆகிய நான்கு முக்கிய பயிர்களின் செயலாற்றத்தின் மூலக் குறிகாட்டிகள் அட்டவணை 1·5 இல் தரப்பட்டுள்ளன.

**தேயிலை**

முன்னைய ஆண்டின் வீழ்ச்சி மட்டத்திலிருந்து 1977இல் திருந்திய நிலைக்கான அறிகுறியைக் காட்டிய தேயிலைக் கைத்தொழில் 1978இல் எதிர்பார்ப்பிற்கு மாறாக இருந்தது. 1977இல் 4,600 இலட்சம் இறாத்தல்களாக இருந்த உற்பத்தி 1978இல் 5 சதவீதத்தால் 4,390 இலட்சம் இறாத்தல்களுக்கு வீழ்ந்தது. இது 1976இன் கீழ் நிலையிலும் பார்க்கச் சிறிது மேலாகவும் (பத்து ஆண்டுகளில் இதுவே மிகக்குறைந்தது) 1965இல் என்றுமில்லாத அளவில் பதிவு செய்யப்பட்ட 5,030 இலட்சம் இறாத்தல்களுக்கு மிகக் கீழேயும் இருக்கின்றது.

உயர்நில, மத்திய நிலத் தேயிலைகளின் உற்பத்தியில் ஏற்பட்ட மிகப் பெரும் வீழ்ச்சியும் தாழ்நிலத் தேயிலையின் மெதுவான வளர்ச்சியும் இலங்கையின் முக்கிய கைத்தொழிலான இதன் வீழ்ச்சிக்கு முழுக் காரணமாகும். உண்மையில் முன்னைய ஆண்டின் அதிகரிப்பான 160 இலட்சம் இறாத்தல்கள் அல்லது 13 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் தாழ்நில, தேயிலை உற்பத்தி 70 இலட்சம் இறாத்தல்கள் அல்லது 5 சதவீதத்தால் உயர்ந்தது. உயர்நில தேயிலை உற்பத்தி கடந்த ஆண்டின் 60 இலட்சம் இறாத்தல்கள் அல்லது 4 சதவீத உயர்விற்கு மாறாக 150 இலட்சம் அல்லது 9 சதவீதத்தால் வீழ்ந்தது. மத்தியநிலத்தேயிலை உற்பத்தி கடந்த ஆண்டின் 3 சதவீத உயர்விற்கு மாறாக 130 இலட்சம் இறாத்தல்களால் அல்லது 8 சதவீதத்தால் வீழ்ந்தது,

தேயிலைத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள், என்றுமில்லாதவகையில் 1977இல் 80,394 மெட்ரிக் தொன்களிலிருந்து 1978இல் 115,500 தொன்களுக்கு அல்லது 44 சதவீதத்தால் உயர்ந்தது. இது கடந்த ஆண்டின் வளமாக்கி வழங்கலின் 18 சதவீதம்கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக இருந்தது. இவ்வாறிருந்த போதும் ஏக்கருக்கான சராசரி விளைவு 1977இன் 7 சதவீதம் கொண்ட உயர்வுடன் ஒப்பிடுகையில் 1978இல் 7 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது,

தேயிலைப் பயிர்ச் செய்கையின் கீழ் இருந்த மொத்த நிலப்பரப்பு 1978இல் 1 சதவீதத்தால் 603,464 ஏக்கர்களுக்கு உயர்ந்தது, இவ்வாண்டுக் காலத்தில் மீள்நடுகை செய்யப்பட்ட பரப்பளவு 5,811 ஏக்கர்களாகும், இது 1977இல் மீள்நடுகை செய்யப்பட்ட 3067 ஏக்கர்களுடன் சார்பாக ஒப்பிடத்தக்கது. ஆனால் இது விரும்பத்தக்க மீள்நடுகை ஆண்டு இலக்கான

7500 ஏக்கர்களுக்கு மிகக் கீழேயே இருந்தது. இதுவரை உயர்விளைவிற்காக மீள்நடுகை செய்யப்பட்ட மொத்தத் தேயிலை நிலப்பரப்பு 1978 இறுதியில் 79,568 ஏக்கர்களாக அமைந்திருந்தது, இது நாட்டின் மொத்தத் தேயிலை நிலத்தின் 13 சதவீதம் கொண்ட சிறிய பங்காகும்.

1978இல் தேயிலைக் கைத்தொழிலின் ஏமாற்றம் தரும் செயலாற்றத்தை மதிப்பிடுகையில் மிகச்சாதகமான காலநிலைமைகள் நிலவிய வேளையாகிய 1977இல் தேயிலைக்கான விலைகள் என்றுமில்லாதமட்டத்திற்கு உயர்ந்ததைக் கருத்தில் கொள்வதுடன் உற்பத்தியாளர்களின் கவனத்தை இது தூண்டியமையையும் கவனத்தில் கொள்ளல்வேண்டும். ஆயினும் 1978இல் விலைகள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. 1978இல் இலங்கைத் தேயிலைக்கான இலண்டன் விலைகள் சராசரியாக இருந்ததுடன் 1977இலும் பார்க்க 44 சதவீதம் குறைவானதாகும். உண்மையில் இந்த விலைகள் பெரும்பாலும் 1977இன் முற்பகுதியில் நிலவிய உச்ச விலைகளில் அரைப் பங்கினதாகவே இருந்தன. சராசரியாகக் கொழும்பு விலைகளும் கூட 1977இனைவிட 13 சதவீதம் குறைவாக இருந்தது. மேலும் விலைகளின் வீழ்ச்சியை எதிர்நோக்கிக் கொண்டிருந்த வேளையில் 1977 நவெம்பரில் தேயிலைக் கைத்தொழிலின் வரிவிதிப்பில் அடிப்படை மாற்றங்கள் நடைமுறைக்கு வந்தமை, இத்தொழிலின் மீது மிகப்பெரும் தீங்கினை ஏற்படுத்தியது. (இம் மாற்றத்திற்கு முன் வரிமதிப்பானது பெயரளவில் அமைந்த ஏற்றுமதித் தீர்வையிலும் மற்றயவை ஏல விற்பனை ;விலைகளில் அமைந்த கணிசமான பெறுமதி அடிப்பயையில் அமைந்த படிப்படி ஏறியிறங்கிக் செல்லும் திட்டத் தீர்வையிலும் தங்கியிருந்தது. கணிசமான அளவு குறிப்பிடத்தக்க ஏற்றுமதிக் தீர்வைக்கு இது மாற்றப்பட்டதுடன் ஏல அடிப்படையின் சிறிய பெறுமதி அடிப்படையிலமைந்த வரியும் விதிக்கப்பட்டது) ஐயமின்றி 1977இன் செலாவணிச் சீர்திருத்தங்களின் விளைவாகக் கிடைத்த எதிர்பாராத இலாபங்களை மாற்றியமைப்பதற்கு இதுவே மிக வசதியான வழியாக இருந்தது. ஆனல் விலைகளின் வீழ்ச்சியுடன் குறிப்பிட்ட வரி பெரும் சுமையாகிவிட்டதுடன் குறிப்பிட்ட ஏற்றுமதித் தீர்வையில் சீராக்கங்கள் செய்யப்படவில்லை. இதன் விளைவாக 1978இல் உற்பத்தியாளர்களின் விலைகள் 1977இன் நிலையைவிட மிகக்குறைந்த போக்கை அடைந்தது. மறுபுறத்தில் உற்பத்திச் செலவு (மீள்நடுகைக்குத் தேவைப்பட்ட மேலதிக தொழிலாளர் செலவைக் கணிப்பில் எடுக்காமல்) 1978இல் 30 சதவீதத்தால் உயர்ந்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனல் குறைவடைகின்ற வருமானமும் உயர்ந்து செல்கின்ற செலவும் கைத்தொழிலை இருபுறமும் நசுக்கி உற்பத்தியாளரின் இலாபத்தைப் பெருமளவில் குறைத்தது.

மத்திய கிழக்கில் உறுதியான சந்தையின் காரணமாக தாழ்நிலத் தேயிலைகளுக்கு மிகச்சிறந்த சாதகமான விலைகள் தொடர்ந்தும் இருந்தமையினல் 1978இல் என்றுமில்லாதவகையில் உற்பத்தி இலாபம் இருந்த வேளையில் உயர்நில, மத்திய நில தேயிலைகள் கவர்ச்சியற்ற விலைகளைக் கூடுதலாகப் பெற்றிருந்தன. இலாப எல்லைகள் குறைந்து வருவதை எதிர்நோக்கும் உற்பத்தியாளர்கள் செலவுகளைக் குறைப்பதற்காக விதந்துரைக்கப்பட்ட வழமையான செயல் முறைகளைப் புறக்கணிக்கும் போக்கு நிலவியது. இது எதிர்காலத்திலும் உற்பத்தி வீழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. உண்மையில் இரண்டு பெரிய பெருந்தோட்ட நிறுவனங்களான அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனமும், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் 1972, 1975ஆம்

ஆண்களில் காணிச்சீர்திருத்தம் மூலம் அரசுடைமையாக்கப்பட்ட பெருமளவு நிலங்களை முகாமைப்படுத்தி 1978இன் உற்பத்தியை அவற்றின் 1977இன் மட்டங்களுக்கு பேணியிருப்பது போல் தோன்றுகின்றது. இது தேயிலை உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி தனியாருக்குச் சொந்தமான நிலங்களிலிருந்தே வந்தது என்பதை குறிக்கும்.

எவ்வாறுயினும் இந்நாட்டின் சிறந்த தேயிலைத் தோட்டங்களை முகாமைப்படுத்தும் இவ்விரண்டு கூட்டுத்தாபனங்களும் இலங்கையின் தேயிலை உற்பத்தியில் எதிர்பார்க்கப்படும் முக்கிய அதிகரிப்பிற்கு பெருமளவு வகை கூறத்தக்க நிலையில் இருக்க வேண்டும் என்பது கவனிக்கப்படல்வேண்டும். இந்தச் சூழ்நிலையில் 1978இல் இவ்விரு நிறுவனங்களினதும் செயலாற்றம் ஏமாற்றம் தரத்தக்கதாகவேகாணப்படுகின்றது. எனினும் இதற்குப் புறநடையான சூழ்நிலைகளும் இருந்தன. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை ஆணைக்குழுவின் உடமையாக இருந்த நிலங்கள் இவ்விரண்டு நிறுவனங்களுக்கும் மாற்றப்பட்டதும் 1977ஆம் ஆண்டு பொறுப்பேற்கப்பட்ட நிலங்கள் சீரானமுறையில் இரண்டு முக்கிய அமைப்புக்களுக்கிடையிலும் பங்கிடப்பட்டு வழங்கப்பட்டதையொட்டிச் சில குழப்ப நிலைகள் இருந்தன. இந்த நிறுவனங்கள் இன்னும் சில ஆண்டுகளுக்கு உற்பத்தியில் சாதகமான தாக்கங்களைக் கொண்டிருக்கும், மேலும் வளமாக்கி உதவு தொகைகளைப் பொறுத்த வரையில் அரசு, அரச நிறுவனங்களின் மீது ஒரு பாகுபாடான கொள்கையைக் கடைப்பிடித்தது. 1978ஆம் ஆண்டின் பெரும் பகுதிக்காலத்தில் தனிப்பட்ட நிலவுடமையாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவு தொகையில் இவை அரைப்பங்கிற்கே உரித்துடையனவாக இருந்தன. இவைகள் அரச நிறுவனங்களாக இருந்தமையால் அவைகளின் தொழிற்பாட்டில் நிதிவலுக்கள் முக்கியமானவை அல்ல என்று அரசு உணர்ந்ததால்போலும். ஆனால் உண்மையில் இத்தகைய முடிவுகள் இந்த நிறுவனங்களின் மீது குறிப்பிடத்தக்க திரவத்தன்மை வாய்ந்த தடைகளை ஏற்படுத்தியதுடன் இலாப எல்லைகளைக்குறைத்து பெருந்தோட்ட முகாமைகளுக்கிடையிலுள்ள ஊக்குவிப்புத் தன்மைகளையும் பாதிப்படையச் செய்தது.

மேலும், 1964 இன் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் தொழிலாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டதன் திரண்டவிளைவின் காரணமாக குறிப்பிட்ட உயர்நில தேயிலை வளர் பரப்புக்களில் தொழிலாளரின் கடுமையான பற்றுக்குறை இருந்தது. இது, கொழுந்து பறிக்கும் சுற்று எண்ணிக்கையைக் குறைந்ததுடன் உற்பத்தியையும் பாதித்தது. தவிர சில குறிப்பிட்ட உயர்நிலத் தேயிலை வளர் பரப்புக்களில் காலநிலையும் சாதகமற்ற நிலையில் இருந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

மீளாய்விற்குரிய இவ்வாண்டில் தொடர்ந்தும் குறைந்த வீதத்தில் இருந்த மீள்நடுகை, குறைக்கப்பட்ட இலாபம், அரச நிறுவனங்களின் திரவத்தன்மை மைகுறைப்பு, நிறுவனங்களின் சீர்திருத்தங்களால் ஏற்பட்ட சீர்குலைவுகள் பயிர்ச்செய்கைப் பொருள் வழங்கலின் பற்றுக்குறை என்பன மீளாய்விற்குரிய இவ் வாண்டில் தொடர்ந்தும் குறைந்த வீதத்தில் இருந்த மீள்நடுகைக்கு காரணமாக இருந்தன.

மொத்தமாக தேயிலைக் கைத்தொழில் பலமுக்கிய சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதுபோல் தோன்றுகிறது. கடந்த ஆண்டில் வலியுறுத்தப் பட்டதுபோல் பொருளாதாரத்தின் முக்கிய துறையான இதன் உயர்ந்த

உற்பத்திக்கு உயர்ந்த வீத மீள்நடுகையும் அரசதுறையில் திருந்திய முகாமையும் சிறந்த உற்பத்தியாளர் இலாபங்களும் தேவைப்பட்டன. இவை கடைப்பிடிக்கப்படின் மரபு வழியாக எடுத்துரைக்கப்பட்ட செயல்முறைகளை கைக்கொள்ள உதவியாக இருக்கும். தேயிலை மீள்நடுகை, ஏற்றுமதிகள் மீதான வரிகளால் நிதியிடப்படுவதுடன் உதவு தொகைகள் உயர்த்தபட்டதால் உயர்ந்த மீள்நடுகைக்கான உள்ளார்ந்த வளஆற்றலும் காணப்படுகின்றது. பயிர்ச்செய்கைக்கான பொருட்களின் தேவையை ஈடுசெய்யவேண்டின் மிகக் கூடுதலான நாற்று மேடைகளை நிறுவவேண்டியிருக்கும், அரசிற்குச் சொந்தமான நிலத்தின் ஆகக்கூடிய உள்ளார்ந்த வளம் உணரப்படுமாயின் முகாமையாளர்களுக்கு ஊக்கத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது அவசியமானதாகும். ஒரே சீரான சிறப்புக் கொடுப்பனவுகளையும் தரப்படுத்தப்பட்ட சம்பளங்களையும் கொண்ட தற்போதைய முறையின் கீழ் உற்பத்தியைச் திருந்தச் செய்வதற்கான ஊக்குவிப்புக்கள் எதுவுமில்லை. அத்துடன் அரசுடமைகளின் கீழ் முகாமையாளர்களின் முடிவு எடுக்கும் அதிகாரம் கணிசமானளவு குறைக்கப்பட்டிருப்பது போல் தோன்றுகிறது. கூடிய தாக்கம் கொண்ட மானில அடிப்படையிலான முகாமை, முகாமையாளர்களுக்கு பெரும் அதிகாரத்தை அளிப்பதற்கு உதவும் அத்துடன் வெற்றிகரமான முகாமையிடுதலுக்கு இந்நிறுவனங்கள் மிகப்பெரியனவாக இருப்பது தடையாக இருக்கின்றனவா என்பதையும் ஆராய்தல் எற்புடையது.

இறப்பர்

இறப்பர் உற்பத்தி 1977 ஆண்டின் 3,220 இலட்சம் இருத்தல்களிலிருந்து 1978 ஆண்டில் 3,480 இலட்சம் இருத்தல்கட்கு உயர்ந்து 7 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இது 1970 ஆம் ஆண்டின் அமைந்து உச்ச உற்பத்தியான 3510 இலட்சம் இருத்தல்களுக்குப் பின்னர் அடையப்பெற்ற அதி உயர்ந்த உற்பத்தியாகும். ஏக்கருக்குரிய சராசரி விளைச்சல் 1978இல் 753 இருத்தல்களில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேறி ஏறக்குறைய 9 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இதுவே இதுவரை காலமும் பதியப்பட்ட விளைச்சல்களில் மிகவும் உயர்ந்ததாகும் மறுபுறத்தில் பால் வெட்டுதலுக்கு உட்பட்ட நிலப்பரப்பு 2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. உற்பத்தியில் ஏற்பட்ட இக் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு கவர்ச்சிகரமான விலைகளுடன் இணைந்து சார்பான கால நிலைமை தொடர்ந்திருந்தமை பெரும் காரணிகளாகும். உற்பத்தியாளர்களுக்குக் கிடைத்த கவர்ச்சிரமான இலாபம் சிறுஅளவில் இலாபம் பெற்ற உற்பத்தியாளர்களை மரங்களில் கூடிய அளவில் பால் வெட்டுதலுக்குத் தூண்டியது.

மீள்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு 1977 இன் 6,464 ஏக்கரிலிருந்து 1978 இல் 7968 ஏக்கர்களாக 23 சதவீதத்தால் கணிசமான அளவு அதிகரித்து விளங்கியது. இந்த திருந்திய செயலாற்றத்திற்கு 1977 நவெம்பரில் அறிவிக்கப்பட்ட மீள்நடுகைக்கான உதவுதொகை அதிகரிப்பே பெருமளவில் காரணமாக இருந்தது. எனினும் மீள்நடுகையான்து ஆண்டுதோறும் 15,000 ஏக்கர் மீள் நடுகை செய்யப்படல் வேண்டுமென்ற ஆண்டு அடைவு எல்லைக்கு தொடர்ந்தும் பின்னடைந்து வந்துள்ளமையால் (நிறைவேறுதிருக்கும் பணி முழுமையாக்கப்பட்டின் ஏறக்குறைய 17,000 ஏக்கர்கள்) அரசு 1978 நவம்பரில் உதவு தொகையை மேலும் ஏக்கருக்கு ரூ 3,000 இலிருந்து ரூ. 4,000 ஆக அதிகரித்தது. நீண்ட பால் கொள்ளும் காலத்தில் ஏற்படும் மொத்தச் செலவு, வருமான இழப்புக்களுக்கு இவ்வதிகரிப்பு ஈடுசெய்யப் போதுமான

தாக இல்லாத போதிலும் 1979 இல் மீள் நடுகையின் மீது இது பயனுறு விளைவினை ஏற்படுத்தக்கூடும். 1978 இறுதியில் மொத்தமாக மீள் நடுகை செய்யப்பட்ட 346,653 ஏக்கரானது பயிர்ச் செய்கைக்குட்பட்ட நிலப்பரப்பின் 62 சதவீதத்தையே கொண்டுவிளங்கியது.

முன்னைய ஆண்டில் 111 ஏக்கருக்கும் மாருக 1978 இல் 935 ஏக்கர்களில் இறப்பர் புதிதாக நடுகை செய்யப்பட்டது. உயர்ந்த உற்பத்தி வருமானம் 1978 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் புதிய நடுகைக்கான உதவு தொகைகளுக்கு ரூ. 1,800 இலிருந்து ரூ. 2,700 ஆக உயர்த்தியமை இவ் வதிகரிப்பைக் கொணரக் காரணமாக இருந்தன.

இறப்பருக்கான வளமாக்கி வழங்கல் 1977 இன் 12,440 மெற்றிக் தொன்னிலிருந்து 1978 இல் 21,010 மெட்றிக் தொன்னுக அதிகரித்தது. 1978 இன் முதல் அரைப்பகுதி முழுவதிலும் வளமாக்கி கிடைக்கப்பெறு வதில் ஏற்பட்ட அதிகரிப்பும் உயர்ந்தவித உதவுதொகை பெற்று வந்தமையும் வளமாக்கிப் பயன்பாட்டில் ஏற்பட்டமுன்னேற்றத்தினை எடுத்துக்காட்டு கிறது.

பெற்ரேல் இரசாயன கைத்தொழில்களின் உற்பத்தியாக செயற்கை இறப்பர் இருப்பதாலும் எண்ணெய் விலை, அதிகரித்துச் செல்லும் போக்கைக் கொண்டிருப்பதாலும் செயற்கை இறப்பருக்கான விலையும் கட்டாயம் உயரும். ஆதலின் இயற்கை இறப்பருக்கான எதிர்கால வாய்ப்புக்கள் நன்ருக இருக்கும். மேலும் முதன்மை உற்பத்தியாளர்களிடையிலான பன்னுட்டு ஒத்துழைப்பில் இறப்பரைப் பொறுத்தமட்டில் வாய்ப்புக்கள் இன்னும் நன்ருகவே இருந்துவருகின்றன. இறப்பர் உற்பத்தியிலே அதிகரித்து மிகவும் சார்பான விலையிலிருந்து நல்ல பயன் பெற்றுக்கொள்வதற்கு அதிக ஒருங்கிணைந்த முயற்சி தேவைப்படுகிறது. இதற்கு, நடைமுறையிலிருக்கும் மீள்நடுகை வீதத்தை இரட்டிப்பது மிகவும் கூடியது எனக் கருதமுடியாது. விறகின் நிரம்பல் அருகிவருகின்றமையால் உண்மையில் பிடுங்கப்பட்ட இறப்பர் மரங்கள் விறகிற்கான முக்கிய மூலமாக இருக்கும். மீள்நடுகை அடைவு எல்லையை அடைதற்கும், பற்ருக்குறையான மீள்நடுகையினை முழுமை செய்வதற்கும் உதவுதொகையில் கணிசமானளவு அதிகரிப்பு வேண்டியதொன்ருகும். சிறு உடமையாளர்களுக்கான வசதிகளைக் காட்டுவது முன்னேற்றுவது இறப்பரின் தரத்தினை உயர்த்தியதற்கு வழிவகுக்கும். திருந்திய தர இறப்பரிற்கான நல்ல விலை பற்றியும் கவனத்திற் கொள்வது நன்ருகும்.

**தெங்கு**

முன்னைய இரு ஆண்டுகளிலும் என்றுமில்லாதவகையில் வரட்சி நிலவியதால் 1977 இல் அதனது கீழ் மட்டத்திற்கு வீழ்ச்சியுற்ற தெங்கு உற்பத்தி 1978இல் திருந்துவதற்கான அறிகுறிகளைக் காட்டியது. 1978 இல் தெங்கு உற்பத்தியானது 22,070 காய்களால் 21 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது என மதிப்பிடப்பட்டது. ஆயினும் உற்பத்தியானது எழுபதுகளின் தொடக்கத்தில் அடையப்பெற்ற 25,000 இலட்சம் சராசரி மட்டத்தினைவிட அதிகளவில் பின்னடைந்தே காணப்படுகின்றது.

1978இல் தெங்கு வரவேற்கத்தக்கவகையில் நன்னிலையை அடைந்தமைக்கு 1977 இல் காலந்தாழ்த்தி பெறப்பட்ட சமமான மழை வீழ்ச்சியின் தாக்கங்களும், 1978 இல் நிலவியசார்பான கடலையும் பெருமளவில் காரணமாக இருக்கலாம். அத்தோடு, தெங்கு நிலப்பரப்புக்களை நன்கு பேணிப் பெறவும் தெங்கு உற்பத்தியின் சார்பான பயன்தரு விளைவுகளுக்கு காரணமாகத் தென்பட்டது. 1978 இல் தெங்கு நிலங்களுக்கான வளமாக்கிப் பயன்பாடு

46 சத வீதத்தால் 42,500 மெற்றிக் தொன்களுக்கு பெருமளவில் அதிகரித்தது. 1978 இன் முதல் அரைப்பகுதியில் தனியார்துறையினருக்கான 75 சதவீத உதவு தொகை நடைமுறையில் இருந்தமையே இதற்கு முக்கிய காரணமாகும். முன்னேற்றகரமான வளமாக்கிப் பயன்பாட்டிற்கு தெங்கு சந்தைப்படுத்தல் சபையால் நிறுவப்பட்ட மாநில வளமாக்கி பங்கீட்டு நிலையங்களும் வளமாக்கி அதிகளவு தாரளமாகவும், குறிப்பிட்ட போகத்திற்கு கிடைக்கப் பெற்றமை ஆகியன வளமாக்கிப் பயன்பாட்டினை தெளிவாக்குகின்றன.

1978 இல் மீளநடுகைக்குட்படுத்தப்பட்டதும் புதிதாக செய்கைக்குட்படுத்தப்பட்டதுமான மொத்த நிலப்பரப்பு முறையே 1,207 ஏக்கராகவும் 1,297 ஏக்கராகவும் காணப்பட்டன. கோப்பி, கொக்கோ, மிளகு ஆகியவற்ருல் 233 ஏக்கர் கொண்ட ஒரு நிலப்பரப்பு பல்லினப் பயிர்ச் செயகைக்குட்படுத்தப்பட்டது. தெங்கு துணைத்துறையில் உற்பத்தியினை தூண்டவும் நிலத்தினை நல்ல முறையில் பயன்படுத்தவும் நடுகை, கீழ்நடுகை மீள சீர்படுத்துதல், புதிதாக பயிரிடுதல், இடையில் பயிரிடுதல் ஆகியற்றிற்கான உதவு தொகைகள் 1978 ஒகத்தில் அதிகரிக்கப்பட்டன.

1978 நவெம்பரில் ஏற்பட்ட சூருவளி, அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை ஆகிய மாவட்டதிலுள்ள ஏறக்குறைய 30,000 ஏக்கர் தெங்கு நிலப்பரப்பினை முற்ருக அழித்திருக்குமென மதிப்பிடப்படுகிறது. இத்தொகை நாட்டின் மொத்தப் பரப்பில் ஏறக்குறைய 2 சதவீதமாகும்.

தெங்கு மிக நீண்டதொரு காலத்துக்கு இறுக்கமாகக் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது வழிப்படுத்தலிற்குட்பட்டதொரு கைத்தொழிலாக இருந்து வந்துள்ளது. ஒரு புறத்தில் தெங்கு உள்நாட்டு உணவின் ஒரு முக்கியமான பகுதியாக இருப்பதால் தொடர்ந்து வந்த அரசுகள் அதன் விலையினை குறைவாக வைத்திருக்க பெருமுயற்சி எடுத்தன. மறுபுறத்தில் தெங்குப் பயிர்ச்செய்கையானது தனிப்பயிர் அடிப்படையில் அமைந்திருப்பதால் அதற்குக் குறைந்தளவு கவனமே தேவைப்படுகிறது. (எடுத்துக்காட்டாக தேயிலை, இறப்பர் ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில்) எனவே நில உடமையாளர்கள் கூட நீண்டகாலமாக குறைந்தளவு கவனத்தையே செலுத்தி வருகின்றனர். அல்லது வருவாய் பிற வழிகளிலிருந்து வருவதால் அவர்கள் தங்கள் முதலீடுகளிலிருந்து தேவையான அதிகளவு வருவாயினை பெறுவதில் கூடிய அக்கறை கொண்டிருப்பதில்லை. நடைமுறையில் பதனிடல் கைத்தொழில் இயலளவுக்கு மேல் இருப்பதால் புதிய முதலீடுகள் எதுவும் அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்படவில்லை. மறு சொல்லில் கூறின் இக்கைத்தொழில் தனது நிலையான மந்தம் அல்லது வீழ்ச்சிப் போக்கினையே காட்டி நின்றது. நுகர்வு அதிகரித்த போது அல்லது உற்பத்தி வீழ்ச்சியுற்ற போது குறைந்தளவில் நுகர்வு விலைகளைப் பேணுவதற்கு அரசுகள் ஏற்றுமதி விலையினைக் குறைப்பதில் ஆர்வம் கொண்டிருந்தன.

நுகர்வோர் நன்மையானது உற்பத்தியாளருடையதைவிட மேலோங்கி நிற்பது தெளிவானபோதிலும், நாட்டில் தெங்குக் கைத்தொழில் ஒரு பெரும் கைத்தொழிலாக வளர்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் தெங்குப் பயிர்ச்செய்கைக்கான பரப்பளவு நெல்லிற்கு அடுத்ததாக இரண்டாவதாக உள்ளமை கவனிக்கத்தக்கது. இந்தக் கைத்தொழிலினை அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறையை மேற்கொள்வது நுகர்வோரிடையே மட்டும் அன்றி உற்பத்தியாளரிடையேயும் பெரும்

தாக்கம் ஒன்றினை ஏற்படுத்துவதாக அமையும். கைத்தொழிலின் உற்பத்தித் திறனை புதிய முதலீடுகள் அதிகரிக்கலாமெனினும் கைத்தொழில் அதிக இலாபம் தரக்கூடியதாக அமையாத நிலையில் நீண்ட கால முதலீடு களை எதிர்நோக்க முடியாது. பதிலீட்டு எண்ணெய் உள்ளூரில் அபிவிருத்தி செய்யப்படின் அல்லது இறக்குமதி செய்ய முடியுமானால் கூடியளவில் எண் ணெய் ஏற்றுமதியை அதிகரிக்கலாம். அதாவது தெங்கு ஓர் உயர் வலிவு மிக்க வளர்ச்சிக் கைத்தொழிலாக இருந்த போதிலும் நீண்ட கால புறக்கணிப்பினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இத் கைத்தொழி லுக்கும் பொறுப்பாக உருவாக்கப்பட்டுள்ள புதிய அமைச்சு தெங்கு கைத் தொழிலுக்குப் புத்துயிர் அளித்து அதனை ஒரு முதன்மையான கைத்தொழி லாக உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

நெல்

குடிமதிப்புப்புள்ளி விபரத்திணைக்களத்தின்படி, 78 பயிர்ச் செய்கையாண் டின் (பெரும்போகம் 1977/78, சிறுபோகம் 1978) நெல் உற்பத்தி 906 இலட் சம் புசல்களென மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டினைவிட 102 இலட் சம் புசல்கள் அல்லது 13 சதவீத அதிகரிப்பை இது எடுத்துக்காட்டுகின்றது.

மொத்த அறுவடையில் 616 இலட்சம் புசல்கள் அல்லது மூன்றில் இரண்டு பகுதி பெரும் போகத்தில் பெறப்பட்டது. இது மற்றெந்த பெரும் போகத்தினையும் விட உயர்ந்த உற்பத்தியைப் பதிவு செய்ததுடன் முன் னைய பெரும்போகத்தினைவிட 68 இலட்சம் புசல்கள் அல்லது 12.4 சதவீத அதிகரிப்பொன்றினைக் காட்டி நின்றது. 1978 ஆம் ஆண்டில் சிறுபோகம் மொத்த அறுவடையில் 289 இலட்சம் புசல்களுக்கு அல்லது 32 சதவீதத்திற்கு வகைகூறியது. மீண்டும் இதுவரை வேறெந்த சிறுபோகத்திலும் பதிவு செய் யப்பட்டவற்றில் ஆகக்கூடிய அறுவடை இதுவாகும். மேலும் சார்பான காலநிலை, விதைத்து அறுவடை செய்யப்பட்ட நிலபரப்பில் ஏற்பட்ட கணிச மானளவு அதிகரிப்பு, நீர்ப்பாய்ச்சலுக்கு உட்படுத்தப்பட்ட பரப்பின் விரி வாக்கம், நிறுவன ரீதியான கொடுகடன்கள் அதிகளவில் கிடைக்கப்பெற் றமை, வளமாக்கியின் அதிகரித்த பயன்பாடு ஆகியவற்றுடன் நெல்லிற்கான உத்தரவாத விலை அதிகரிக்கப்பட்டமையும், 1978 இல் இத்தகையதொரு மேலோங்கிய அறுவடைக்கு முக்கிய காரணிகளாக விளங்கின.

விதைக்கப்பட்ட நிலப்பரப்பு 1977இல் 20.5 இலட்சம் ஏக்கர்களிலிருந்து 6 சதவீதத்தால் 1978இல் 21.6 இலட்சம் ஏக்கர்களாக அதிகரித்தது. அறு வடை செய்யப்பட்ட நிலப் பரப்பு 19·3 இலட்சம் ஏக்கர்களிலிருந்து 1978 இல் 20.7 இலட்சம் ஏக்கர்களாக அதிகரித்தது. இது 7.3. சதவீத அதிகரிப்பாகும். நீர்ப்பாசனத்திட்டங்களின் கீழ் குறிப்பாக மாகாவலி அபிவிருத்தித் திட்ட முதற் கட்டத்தில் நீர் வழங்கல் உறுதிப்படுத்தப்பட்டமை அறுவடையில் ஏற் பட்ட இத்தகைய அதிகரிப்புக்கு முக்கிய காரணியாகும். நீர்ப்பாய்ச்சலுக்குட் படுத்தப்பட்ட நிலப்பரப்பு முன்னைய ஆண்டின் அளவைவிட 121,000 ஏக்கர் களாக அதிகரித்தது. பயிரிழப்பின் தாக்கத்தால் விதைக்கப்பட்டதும், அறு வடை செய்யப்பட்டதுமான நிலப்பரப்புக்களிற்கிடையிலான வேறுபாடு 1977 ஆம் ஆண்டின் 6 சதவீதத்திலிருந்து 1978 இல் 4 சதவீதமாக வீழ்ச்சி யுற்றது.

கம நலப் பணிகள் திணைக்களத்தின் நெற்றுறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1977 ஆம் ஆண்டில் 80,123 தொன்களிலிருந்து 1978 இல் 112,000 தொன்களாக 40 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. நெற் பயிர்ச் செய்கைக்கான வேளாண்மைக் கொடுகடன், பயிர்ச் செய்கை ஆண்டு 1977 இன் ரூ. 992 இலட்சங்களிலிருந்து 1978 இல் ரூ. 426 இலட்சங்களாக மிகப் பெருமளவில் அதிகரித்தது. ஆண்டின் பெரும் போகத்திலேயே இவ்வதிகரிப்பின் பெரும்பகுதி பதிவு செய்யப்பட்டது.

மேலே கூறப்பட்ட காரணிகள் சார்பாக இருந்தபோதிலும் ஏக்கருக்கான சராசரி விளைவு மிகக் குறைந்தளவு முன்னேற்றத்தையே காட்டி நின்றது. ஏக்கர் ஒன்றிற்கான சராசரி விளைவு 1977 இல் பதியப்பட்ட 48.9 புசல்களுக்கு மாறாக 1978 இல் 50.7 புசல்களாக இருந்தது. இந்த எல்லையளவு முன்னேற்றங்கூட பெரும்பாலும், நீர்ப்பாய்ச்சலுக்குட்பட்ட நிலங்களில் மட்டுமே ஏற்பட்டது. மழை வீழ்ச்சிக்குட்பட்ட நெற் பரப்பின் விளைச்சலில் சிறிய வீழ்ச்சி ஏற்பட்டது. கடந்த ஆண்டறிக்கையில் குறிப்பிட்டது போன்று சாதகமான சூழ்நிலைகள் நிலவிய போதிலும் குறைந்தளவு உற்பத்தி பெறப்பட்டமை கவனத்திற்குரிய விடயமாகும். நிலப் பற்றுக்குறை உள்ள நாட்டில் காணியின் ஒரு கூறில் ஆகக்கூடிய உற்பத்தியை உருவாக்குவது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனவே வேளாண்மை அபிவிருத்தி நெறிமுறைகளை நடைமுறைப்படுத்துமிடத்து ஒரு ஏக்கரில் பெறக்கூடிய விளைவிற்கும் உண்மையான விளைவிற்கும் இடையிலான இடைவெளியினைக் குறைப்பதற்கும், விளைவு வீதத்தினை பெருக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அதிகளவு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

1978ஆம் ஆண்டில் நெற் சந்தைப்படுத்தும் சபை (நெ. ச. ச) கொள்வனவு செய்த மொத்த அளவு அறுவடை செய்யப்பட்ட நெல்லின் 35 சதவீதம் அல்லது 320 இலட்சம் புசல்களாகும். இது 1971 ஆம் ஆண்டுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அளவுகளிலும் ஆகக்கூடிய தொகையாக இருந்ததுடன், 1977இல் கொள்வனவு செய்யப்பட்ட தொகையை விட 75 இலட்சம் புசல்கள் அல்லது 32 சதவீத அதிகரிப்பைக் காட்டிநின்றது. இத்தகைய முன்னேற்றகரமான நிலைக்கு அறுவடையில் ஏற்பட்ட அதிகரிப்பும் 1977 நவெம்பரில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க புசல் ஒன்றிற்கான உத்தரவாதவிலை ரூ. 33இலிருந்து ரூ. 40ஆக அதிகரிக்கப்பட்டமையும், நெற் கொள்வனவில் கடைப்பிடிக்கப்பட்டுவந்த ஆகக் குறைந்த தரக்கட்டுப்பாடுகளைத் தளர்த்தியமையும் முக்கிய காரணிகளாய் அமைந்தன. கொள்வனவு செய்யப்பட்ட 85 சத வீதமானவை உலர்வலயத்திலிருந்து பெறப்பட்டவையாகும். சிறப்பாக அனுராதபுரம், பொலன்நறுவை, திருகோணமலை ஆகும்.

1978இல் நெற் சந்தைப்படுத்தும் சபை பங்கீட்டு முறையின் கீழ் வழங்குவதற்காக 253,121 தொன் அரிசியையும் (177 இலட்சம் புசல் நெல்லுக்குச் சமமான) ஏறக்குறைய 93 இலட்சம் புசல் நெல்லையும் (133,000 தொன் அரிசிக்குச் சமமான) உணவு ஆணையாளருக்கு அனுப்பி வைத்தது. நெல் களஞ்சியப்படுத்துவதில் சபை எதிர்நோக்கும் சிக்கலைக் குறைக்கவும், நெல் குத்தும் இயலளவில் ஏற்படும் இடர்ப்பாடுகளையும் கருத்திற்கொண்டு 1978மே மாதம் கடைசிக் கிழமை தொடக்கம் பங்கீட்டின் கீழ் நெல்லை வழங்கும் முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

நெல்சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சியப்படுத்தலுக்கான இயலளவு 1977இல் 154 இலட்சம் புசல்களிலிருந்து 1978 இறுதியில் 165 இலட்சம் புசல்களாக அதிகரித்தது. இருப்பினும், நெல் மிகையாகப் பெறப்படும் பகுதிகளில் காணப்படும் பற்றாக்குறையான களஞ்சியப்படுத்தல் வசதிகளினால் தொடர்ந்தும் இடர்ப்பாடுகளையே அனுபவித்து வருகிறது. மார்ச்சு தொடக்கம் யூலை வரையிலான ஒரு சிறிய காலப்பகுதிக்குள் பெருந்தொகையான கொள்வனவுகளைக்—கொள்ளனவுகளின் 220 இலட்சம் புசல்கள் அல்லது 66 சதவீதம்—கருத்திற் கொள்ளுகையில் அது, களஞ்சியப்படுத்தல் சிக்கலை மேலும் சிக்கலாக்குவதாக இருக்கிறது. இந்நிலை நெல்லினை திறந்த வெளியில் கூடாரச் சீலைகளின் கீழ் களஞ்சியப்படுத்தலுக்கான சூழ்நிலையையும், நெல் மிகையாக இருக்கும் பகுதிகளிலிருந்து பற்றாக்குறையாக இருக்கும் பகுதிகளுக்கு அனுப்புவதையும் தோற்றுவித்தமையால் சபையின் கொண்டுசெல்லும் செலவு அதிகரிப்பை ஏற்படுத்துகிறது. நெற்சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சியப்படுத்தல் விரிவாக்கங்களை சீர்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்துடன், சபைக்கும் உணவு ஆணையாளருக்குமிடையில் நன்கமைந்த ஒருங்கிணைப்பும் களஞ்சியப்படுத்தல், பற்றாக்குறையான களஞ்சியப்படுத்தல் வசதிகள் காரணமாக ஏற்படும் இழப்பீடுகள் ஆகியவற்றைத் தீர்ப்பதற்கு குறிப்பிடத்தக்களவில் உதவலாம்.

இறக்குமதிகள் தராளமாக்கப்பட்டமையால் ஆலை உரிமையாளர்கள் தமக்குத் தேவையான பொறிகள், உதிரிப்பாகங்கள், ஆகியவற்றைத் தடையின்றி பெறமுடிந்தமையின் காரணமாக கடந்த ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் நெல் குத்தும் இயலளவு முன்னேற்றமடைந்து காணப்பட்டது. 1978 பெப்புருவரியில் நாட்டு மக்கள் தொகையின் ஏறக்குறைய அரைப்பகுதியினரின் அரிசிப் பங்கீடு மீளப்பெறப்பட்டமை அரிசிக்கான தனியார் சந்தை திடீரென விரிவாவதற்கு வழிவகுத்தது. நெல் குத்தல் இயலளவில் ஏற்பட்ட முன்னேற்றம், அரிசிக்கான கேள்வியில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பிற்கு தனியார்துறை ஈடுகொடுக்க வழிவகுத்தது. இதன் விளைவாக கடந்த ஆண்டுக் காலப்பகுதியில் அரிசிக்கான வெளிச்சந்தை விலைகள் மாற்றமுறாதிருந்தது,

**வளமாக்கி**

வளமாக்கிக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட வளமாக்கியின் அளவு 372,300 மெற்றிக் தொன்கள் கொண்ட ஆகக்கூடிய மட்டத்தை அடைந்தது. இது சென்ற ஆண்டின் மட்டமாகிய 303,500 மெற்றிக் தொன்னைவிட 23 சதவீத அதிகரிப்பினை எடுத்துக்காட்டுகிறது. உரிய நேரத்தில் கிடைத்தமையும், பொதுவான சார்பான சூழ்நிலைகள் காரணமாக அதிகரித்த கேள்வி கிடைத்தமையால் வேளாண்மையில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டது. தனியார்துறை கமக்காரர்களை பொறுத்தவரை 1978இல் முதல் அரைப்பகுதியில் உதவு தொகையின் அளவு 50 இலிருந்து 75 சதவீதத்திற்கு அதிகரித்தமையும் இவ்வதிகரிப்புக்குத் துணைநின்றன. வளமாக்கியில் 31 சதவீதம் தேயிலைக்கு வழங்கப்பட்டது. அதே வேளையில் தெங்கு, இறப்பர் துறையின் பங்கு முறையே 11 சதவீதமாகவும், 6 சதவீதமாகவும் விளங்கியது. நெற்றுறை 35 சதவீதத்திற்கு வகைகூறியது.

வளமாக்கிக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை விலைகளின் அடிப்படையில் அமைந்திருந்த வளமாக்கி உதவுதொகையின் வீதம் ஆண்டில் பல தடவை மாற்றத்திற்கு உள்ளானது. 1978 மார்ச்சு 15ஆம் நாள் தொடங்கி அரச துறைக்கு வழங்கப்பட்ட உதவு தொகை 75 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. தனியார்துறை தொடர்ந்தும் 74 சதவீத உதவு தொகையை

நுகர்ந்தபடி இருந்தது. இவ்வீதங்கள் மீண்டும் அரச துறைக்கும் தனியார் துறைக்கும் 1978யூலை 1ஆம் நாள் தொடங்கி முறையே 25 சதவீதமாகவும் 50 சதவீதமாகவும் மாற்றப்பட்டது. பெருமளவு வளமாக்கிப் பயன்பாட்டைத் தடுக்கும் முறையிலேயே இப்புதிய உயர்விலைகள் விளங்குகின்றன. அத்துடன் வளமாக்கிக் கூட்டுத்தாபனம் இறக்குமதியில் வைத்திருந்த தனியுரிமையை இல்லாமல் செய்ய முடிவு செய்தது. எனவே கூட்டுத்தாபனத்தின் விற்பனை விலைகளுக்கு ஏற்பவே வளமாக்கி உதவுதொகை விலைகள் நிர்ணயிக்கப்படுகின்ற வரை இதை நடைமுறைப்படுத்த முடியாது. எனவே 1978 நவெம்பர் 21இல் வளமாக்கியின் இறக்குமதி (கொ. கா. க.) 50 சதவீதம் கொண்ட ஒருமைப்பாட்டு உதவு தொகை அறிவிக்கப்பட்டது. அதேவேளையில் வளமாக்கியிலுள்ள 12½ சதவீத சுங்கத்தீர்வையும் மொத்த விற்பனை வரியும் நீக்கப்பட்டது. இவ்வழி முறைகளுடன் வளமாக்கியின் விலைகள் 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக குறைக்கப்பட்டது. ஆனால் ஆண்டின் தொடக்கத்தில் இருந்த விலைகளைவிட இவைகூடுதலாக இருந்தன,

**மீனும், கால்நடை வளர்ப்பும்**

சென்ற ஆண்டின் மிகச் சிறிதளவு முன்னேற்றத்திற்கு மாறாக மீனின் உற்பத்தி 1977இல் 138,221 தொன்களிலிருந்து 1978இல் 160,124 தொன்களாக அதிகரித்தது. இது 16 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக்காட்டுகிறது. தனியார்துறையின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பான 22,000 தொன்கள் அல்லது 16 சதவீதங்கொண்ட முன்னேற்றமே இவ்வெற்றிக்குக் காரணமாக விளங்கியது. தனியார்துறையின் உற்பத்தி தேக்கங்களிலிருந்து மொத்தஉற்பத்தியில் இதன் பங்கு தொடர்ந்தும் 1 சதவீதத்திற்குக்கீழ் இருந்தது.

இவ்வாண்டில் தனியார் துறையிலிருந்து மீனைக்கொள்வனவு செய்வதே கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் கொள்கையாக இருந்தது. இதற்கமைய தனியார் துறையிடமிருந்து 4,203 தொன்கள் மீனைக் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்தது. இது சென்ற ஆண்டிலும் பார்க்க 74 சதவீதம் கூடியதாகும். கொள்வனவில் ஏற்பட்ட இம்முன்னேற்றம் தனியார்துறையின் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பை எடுத்துக்காட்டுகிறது.

குடிமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களம் 1978இல் பாலுற்பத்தியை 2,120 இலட்சம்இலிற்றர் என மதிப்பிட்டுள்ளது. இது 1977இல் உற்பத்தி மட்டமாகிய 2,140 இலட்சத்திலிருந்து ஏற்பட்ட வீழ்ச்சியைஎடுத்துக்காட்டுகிறது. ஆண்டின் உற்பத்தியில் 490 இலட்சம் இலிற்றர் அல்லது 23 சதவீதத்தையே தேசிய பாற்சபை சேகரித்தது. ஒப்புநோக்குகையில் சென்ற ஆண்டில் சேகரிக்கப்பட்ட பாலின் அளவு 550 இலட்சம் இலிற்றர் அல்லது 25 சதவீதமாகும். உற்பத்தியிலும் சேகரிப்பிலும் வீழ்ச்சி ஏற்பட்டதற்கு கால்நடைத்தீனியின் உயர்விலைகளின் காரணமாக உற்பத்தியாளர் இலாபம் வீழ்ச்சியுற்றதே இதற்குக் காரணமாகும். இறைச்சிக்கு கூடிய விலை கிடைத்ததினால் அதிகரித்த நிலையில் விலங்குகள் வெட்டப்பட்டதும் பால் உற்பத்தியில் பாதகமான விளைவை ஏற்படுத்தியிருக்கக் கூடும். எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம் தனது கால்நடைத்தீனிகளின் விலைகளை 20 சதவீதத்தால் குறைத்ததும் 1978 நவெம்பரில் 38 சதவீத அதிகரிப்பில் பாலை பாற்சபை கொள்வனவு செய்ததும் 1979இன் வீழ்ச்சிப் போக்கினை மாற்றக் கூடும்.

குடித்தொகை புள்ளிவிபரத்திணைக்களத்தின் மதிப்பீட்டின்படி முட்டைகளின் உற்பத்தி 1977இல் 3800 இலட்சத்திலிருந்து 1978இல் 3600இலட்ச முட்டைகளாக 5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. சென்ற ஆண்டுபோல் விலங்குத் தீனிகளின் விலை உயர்ந்திருந்ததினலும் உற்பத்தியாளர் இலாபம் குறைந்ததினலும் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

**கைத்தொழில்**

இலங்கையின் தயாரிப்புக் கைத்தொழிலின் உற்பத்திப் பெறுமதி (தேயிலை, இறப்பர், தெங்கு ஆகிய முக்கிய மரபுவழி வேளாண்மை ஏற்றுமதிகளுடனிணைந்த ஏற்றுமதித் தயாரிப்புக் கைத்தொழில்கள் தவிர) 1977இன் ரூ. 70,040 இலட்சத்திலிருந்து 1978இல் ரூ. 88510 இலட்சமாக, அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டின் 16 சதவீதத்துக்கெதிராக 26 சதவீத விரிவொன்றையும் பிரதிபலித்தது.[1] விலைமாற்றங்களை எதிரீடு செய்வதற்காக மொத்த விற்பனைவிலைச் சுட்டெண்ணினுல் சுருக்கப்பட்டபோது கைத்தொழில் வளர்ச்சியின் உண்மை வீதம் 1976இலும் 1977இலும் உள்ள 1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1978இல் 11 சதவீதமாக மதிப்பிடப்படலாம்.

1978இல் முன்னெப்பொழுதுமில்லாதவாறு குறிப்பிடத்தக்களவில் கைத்தொழில்கள் தோன்றியமையை 1977ஆம் ஆண்டு பொருளாதாரக் கொள்கைகளை மீள அமைத்ததின் காரணமாக இறுக்கமான கட்டுப்பாடுகளின் பின்னர் உள்நாட்டுக் கைத்தொழில் மீட்சிபெற்றது இயற்கையான விளைவெனக் கூறலாம். இறக்குமதிகள் தாராளமாக்கப்பட்டமை மூலப் பொருட்களினதும் உதிரிப் பாகங்களினதும் கிடைக்கத்தக்க தன்மையை இலகுவாக்கியது. இதன் விளைவாக பதிவுகள் குறைக்கப்படுவதுடன் இயல் அளவுகள் மிகப் பெரும் அளவில் பயன்படுத்தப்பட்டன. இறக்குமதிகளில் குறைந்தளவு போட்டியிருப்பதற்குப் போட்டியுள்ள சூழ்நிலைகளின் தரத்தினை உயர்த்துவது தேவையான தொன்ருகும். கணிசமான இறக்குமதிப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருந்தும் குறிப்பிட்ட சில கைத்தொழில்கள் மிகவும் திறமையற்றனவாய் இருந்ததுடன் அவை வீழ்ச்சியுற்றன. இத்தகைய கைத்தொழில்கள் உயர்ந்த சமூக பொருளாதாரச் செலவில் எப்போதும் காத்துப் பேணப்பட வேண்டுமா என்பது பற்றி ஆராய்தல் நன்மை பயப்பதாகும். உயர்மட்டத் தொழில் வாய்ப்புக்கொண்ட கைத்தறிப் புடைவைக் கைத்தொழில்கள் பாதுகாப்பு வரிகள் நீக்கப்பட்டதன் காரணமாக உள்நாட்டுச் சந்தைக்கு மலிவானதும் தரமானதுமான புடைவைகளை வழங்குதல் என்ற முடிவின் விளைவால் மிகவும் கூடுதலான போட்டியுள்ள புடைவை இறக்குமதிகளுடன் கடுமையாகப் போட்டியிட வேண்டியிருந்தது. நுகர்வோரின் செலவில் கைத்தறிக் கைத்தொழிலில் தொடர்ந்து தொழில் வாய்ப்புக்கு உதவி செய்வது நீண்ட காலத்தில் உற்பத்தித் தரத்தினை குறைப்பதாக இருக்கும். ஏனெனில் இது குறைந்த மட்டத் திறனுக்கு ஊக்கமளிப்பதாக அமைகின்றது. எனவே உயர்ந்த தரமுள்ள உலக சந்தைக்கு வழங்குவதனை நோக்கமாகக்கொண்டு தொழில் நுட்பத்தையும், தரத்தினையும் சீர்திருத்துவது விரும்பத்தக்கதாகும்.

1978இல் அரசதுறைக் கைத்தொழில்களும், தனியார்துறைக் கைத்தொழில்களும் கணிசமானளவில் வளர்ச்சியடைந்தன. நடைமுறைப் பெறுமதி நியதிகளில் தனியார்துறைக் கைத்தொழில் வெளியீடு 30 சதவீதத்

---

1 கடந்த காலத்தை போன்று உள்நாட்டுக் கைத்தொழிலின் பெரும் பகுதியினை அடக்கியுள்ள ஏறக்குறைய 1500 கைத்தொழில் நிறுவனங்களின் மீது மத்தியவங்கியால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டினடிப்படையில் இத்தரவு அமைந்துள்ளது.